In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 157/2021 Prosecution witness P.W.18

Name: S.Vairam Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 30-06-2025.

**(Accused No.4 absent, petition u/s 355 BNSS. filed and allowed. Other Accused are present. )**

முதல் விசாரணை :-

நான் தற்போது ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் நான் வடமதுரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிவந்தேன். 11.01.2019 ம் தேதி அதிகாலை 2 மணியளவில் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ராஜசேகர் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், வேம்பார்பட்டி, அஞ்சுகுளிப்பட்டி, வரதராஜ் அய்யர் மகன் சந்தானகிருஷ்ணன் என்பவர் நிலையத்தில ஆஜராகி அளித்த புகாரைப்பெற்று நிலைய கு.எண்.17/2019 u/s 302 IPC ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கையை ஒன்றை எனது விசாரணைக்கு பார்வைக்கு வைத்தார். அதிகாலை 2.45 மணிக்கு மேற்படி முதல் தகவல் அறிக்கையை பெற்ற நான் 3.30 மணிக்கு சம்பவ இடமான செங்குறிச்சி, மாமரத்துப்பட்டி கரந்தனின் தோட்டத்து வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள பழைய சாலை முன்பு சென்று சம்பவ இடத்தை டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு சாட்சிகள் கருப்பையா, செல்லையா ஆகியோர்கள் முன்னிலையில் ஒரு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அதசாஆ.10. பின்பு 5 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த இரத்தம்பட்ட மண், இரத்தம்படாத மண்

ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். சாட்சிகள் செல்லையா, கருப்பையா ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சாட்சிகள் சந்தானகிருஷ்ணன்,ஹரிஹரன், சீனிவாசன், லட்சுமி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் புகாரில் உள்ள சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை தேடி தக்க துப்பு வைத்தேன். பின்னர் 11.1.2019 ம் தேதி காலை 9 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று அங்கு தட்டு எண்.4 ல் இருந்த சிவக்குமாரின் சவத்தின்மேல் பஞ்சாயத்தார்கள் கதிரேசன், கணேசன், கமலக்கண்ணன், தீபன், சரவணன் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.11. பின்பு சிவக்குமாரின் இறப்பின்மேல் மருத்துவரீதியான காரணம் அறியும்பொருட்டு சவத்தை பிரேதபரிசோதனைக்குட்படுத்த மருத்துவரிடம் ஒப்படைக்க நிலைய முநிகா.எண்.117 திருமதி. சாந்தி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் 11.1.2019 ம் தேதி மாலை திருமதி சாந்தி. முநிகா.117 என்பவர் பிரேத பரிசோதனை முடித்து என் உத்தரவின்படி நிலையம் கொண்டுவந்து ஒப்புவித்த இறந்த சிவக்குமாரின் பிரேதத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட இரத்தக்கறை பட்ட கருப்பு கட்டம்போட்ட அரைக்கை சட்டை ஒன்று, இரத்தக்கறைபடிந்த ப்ரவுன் கலர் பேன்ட் ஒன்று ஆகியவற்றை பெற்று படிவம் 91 ல் பூர்த்தி செய்தேன். அந்த படிவம் அதசாஆ.12. பின்னர் சொத்துக்களை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் 12.1.2019 ம் தேதி எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி 12 மணியளவில் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி முருகன் என்ற கருஞ்சாமியை மந்தைகுளத்துப்பட்டி வெள்ளைச்சாமி என்பவரது வீட்டின்

முன்பு வைத்து காரணம் கூறி கைது செய்தேன். எதிரியின் கைது பற்றி அவரது நண்பருக்கு தெரிவித்தேன். பின்பு சாட்சிகள் கனகராஜ், காளிதாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் கருஞ்சாமி என்ற முருகனை எவ்வித அச்சுறுத்தலோ, ஆசைவார்த்தை இன்றி விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி கருஞ்சாமியை அழைத்துக்கொண்டு சென்ற இடம் உடப்பி என்பவரது தோட்டத்துசாலை பக்கம் புதரில் மறைத்து வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தி, இரத்தக்கறைபடிந்திருந்ததை எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்ய அதனை 15.30 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் மகரில் கைப்பற்றினேன். அந்த கத்தியின் மொத்த நீளம் சுமார் 34 செ.மீ. இரும்பு பூண்போட்ட மரக்கைப்பிடியுடன் இருந்தது. அதில் கைப்பிடியின் பாகம் சுமார் 11 செ.மீ. நீளமும், இரும்பு பாகம் சுமார் 23 செ.மீ. நீளமும் நுனி கூர்மையுடன் இருந்தது. பின்னர் எதிரி எங்களது வேண்டுகோளின்படி ஆஜர் செய்த அவர் அணிந்திருந்த சட்டை காலரில் J inpact மார்க்குடன் உள்ள சிகப்பு கலர் முழுக்கை சட்டை அதில் பூபோன்று முத்திரைகள் இருந்தது இரக்கறைபடிந்திருந்தது- ஒன்று மற்றும் அவர் அணிந்திருந்த இரத்தக்கறைபடிந்த ப்ளு, சிவப்பு, கருப்பு கலர் கட்டம்போட்ட கைலி ஒன்று பெற்றுக்கொண்டு அவருக்கு மாற்றுடைகள் கொடுத்தேன். மேற்படி வழக்குச்சொத்துக்களை மகசரில் கைப்பற்றி படிவம் 91ல் பூர்த்தி செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அதசாஆ.13. இரத்தக்கறைபடிந்த ப்ளு, சிவப்பு, கருப்பு கலர் கட்டம்போட்ட கைலி ஒன்று சாபொ.7.

எனது விசாரணையில் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் மொத்தம் 6 பேர்கள் என தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 302 என்பதில் இருந்து 147, 148, 342, 302 IPC என பிரிவுகளை மாற்றி சட்டப்பிரிவு மாறுதல்

அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். அந்த அறிக்கை அதசாஆ.14. எதிரியை நிலையம் கொண்டுவந்து திரேகசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் தேவிகா, தமிழ்மணி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் சம்மந்தப்பட்ட மற்ற எதிரிகளை தேடிவந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி 13.1.2019 ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி சின்னையா(A2) வெள்ளைச்சாமி (A5) ஆகியோர்களை 12.30 மணிக்கு நத்தம் தாலுகா, குடகிப்பட்டி கிராமம், அய்யனார் அருவி அருகில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன். அந்த இடத்தில் வந்த சாட்சிகள் சக்திவேல், சதீஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி சின்னையாவை விசாரித்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரிகள் சம்பவ இடத்திற்கு அழைத்துச்சென்று சம்பவ இடத்தை அடையாளம் காட்டினர். சாட்சிகள் சக்திவேல், சதீஷ்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி சின்னையா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.15. பின்பு எதிரிகளை நிலையம் கொண்டுவந்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்துக்களை ரசாயன பரிசோதனைக்கு அனுப்பிவைத்து ஆய்வுஅறிக்கை பெறுவதற்கு 24.01.2019 ம் தேதி வேடசந்தூர் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.16. அந்த வேண்டுகோள் கடிதத்தின்படி கைப்பற்றப்பட்ட இவ்வழக்குச் சொத்துக்களை வேடசந்தூர் நீதிமன்றம் மூலம் 31.01.2019 ம் தேதி நீதிமன்றத் தபாலை பெற்று முநிகா.திருமதி சாந்தி என்பவர் மூலம் மதுரை வட்டார அறிவியல் ஆய்வகத்தில் ஒப்புவித்தேன். பின்பு வழக்கில் சம்மந்தப்பட்ட மற்ற எதிரிகளை தேடிவந்தநிலையில் எதிரிகள் தலைமறைவாக இருந்துவந்தனர். சாட்சிகள் ஜெயா, சின்னதுரை, ருத்ராதேவி, மணி

ஆகியோர்களை 2.2.2019 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 09.02.2019 ம் தேதி எனக்கு கிடைத்த தகவலின்படி வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி கரந்தன் (3 வது எதிரி) என்பவரை மாமரத்துப்பட்டி முருகேசன் என்பவரது தோட்டத்தில் வைத்து 11 மணிக்கு கைது செய்தேன். அந்த இடத்தில் இருந்த சாட்சிகள் பாரவேல், பிரகாஷ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரித்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர் என்னை சம்பவ இடத்திற்கு அழைத்துச்சென்று அடையாளம் காட்டினார். பின்பு எதிரியை நிலையம் கொண்டுவந்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். கரந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.17. பின்பு சாட்சிகள் பாரவேல், பிரகாஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.ராஜசேகரனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்நிலையில் எனக்கு பணிமாறுதல் கோவை மாவட்டத்திற்கு வரப்பெற்றதால் நான் வழக்குகோப்பை எனக்கு பின்புவரும் காவல் ஆய்வாளர் விசாரிக்க நிலையத்தில் ஒப்புவித்து இத்துடன் எனது விசாரணையை முடித்துக்கொண்டேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் 1 வது எதிரி கருஞ்சாமியின் பெயர் குறிப்பிட்டுச்சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அவரது புனைப்பெயர் முருகன் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. முருகன் என்பவருக்கு கருஞ்சாமி என்ற புனைப்பெயர் உள்ளது என்ற விவரத்தை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் அவரது ஊரில் உள்ளவர்களை விசாரித்து தெரிந்துகொண்டேன். 11.1.2019 ம் தேதி மாலை நேரத்தில் தெரிந்துகொண்டேன். இந்த வழக்கில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை 12.1.2019 ம் தேதி தாக்கல்

செய்துள்ளேன். அதில் நேரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட புகார் கொடுத்த சந்தானகிருஷ்ணன், ஹரிஹரன் ஆகியோர்களை 11.1.2019 ம் தேதி காலை 6 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் 6 வது வரியில் நத்தம், பெரியமலையூரைச்சேர்ந்த கருஞ்சாமி என்ற முருகன் எனது டீக்கடைக்கு வரும்போது பழக்கம்... எனச்சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலை 6 மணிக்கே மேற்படி சாட்சியின் வாயிலாக 1 வது எதிரியின் புனை பெயரை தெரிந்துகொண்ட நான் 11.1.2019 ம் தேதி காலை 9 மணிக்கு பிரேதத்தின் மீது விசாரணை செய்து தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கையில் 3 வது பக்கத்தில் 9 வது பாராவில் 3 வது லைனில் முருகன் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், கருஞ்சாமி என்ற முருகன் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் 1 வது எதிரிக்கு சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் காயம் ஏற்பட்டவிவரத்தை எனது புலன் விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் எதிரியை கைது செய்தபோது தெரிந்துகொண்டேன். அதற்கு முன்பு தெரியாது. புகாரில் எந்த இடத்திலாவது 1 வது எதிரிக்கு காயமேற்பட்டதாக கண்டுள்ளதா என்றால் இல்லை. 11.1.2019 ம் தேதி காலை 6 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும் சந்தானகிருஷ்ணன், அவரது மகன் ஹரிஹரன் ஆகியோர்களது குவிமுச 161(3)ன் கீழான வாக்குமூலங்களில் 2 வது பக்கத்தில் கீழேயிருந்து 6 வது லைனில் சிவக்குமாரை குத்தவரவும், சிவக்குமார் கத்தியை பிடுங்கி கருஞ்சாமி என்ற முருகனை குத்தினார் என்றும், அவர்கள் அனைவரும் சேர்ந்து கத்தியை பிடுங்கியபோது கருஞ்சாமி என்ற முருகனுக்கு கத்திக்குத்துபட்டது என்றும் கண்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் சம்பவ இடத்திலிருந்து நேரடியாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு இறந்துபோன நபரை அழைத்துவந்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். பின்னர் எனது விசாரணையின்மூலம் இறந்துபோன நபரை

முதலில் சித்தமருத்துவரிடம் அழைத்துச்சென்று பின்பு சிலுவத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச்சென்று அதன் பின்பு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்குஅழைத்துச்சென்றதாக உள்ளது என்றால் சரிதான். சிலுவத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அந்நபர் சிகிச்சை பெற்றதற்கு ஆவணம் பெற்றேனா என்றால் விசாரித்தபோது பதிவு எதுவும் எதுவுமில்லை என தெரியவந்ததால் பெறப்படவில்லை. இறந்துபோன சிவக்குமாரை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேடு வழக்கு கோப்பிலிருந்து எடுக்கப்பட்டு காண்பிக்கப்படுவது இதுதான் என்றால் சரிதான். அந்த விபத்து பதிவேடு எ.மசாஆ.1. அதில் இறந்துபோன நபரை கொண்டுவந்தவர் பிரேம்குமார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஹரிஹரன் மற்றும் பிரேம்குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பிரேம்குமாரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. விலாசத்தை கண்டறிய முடியவில்லை. விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவரை விசாரித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கைப்பொறுத்தவரை 09.2.2019 ம் தேதியுடன் எனது புலன் விசாரணை முடிவு பெற்றது என்றால் சரிதான். சம்பவ இடம் இருட்டாக இருந்ததால் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வை மகசர் தயார் செய்தேன் என்றால் டார்க் லைட் வெளிச்சம் மற்றும் கரந்தனின் வீட்டில் மேல்கூரையில் உள்ள விளக்கு வெளிச்சத்திலும் தயார் செய்தேன். சம்பவ இடத்திற்கும் கரந்தனின் வீட்டில் இருந்த மேல்கூரை வெளிச்சத்திற்கும் இடையே 50 முதல் 75 மீட்டர் தூரமிருக்கும். பார்வை மகசரில் 11.1.2019 ம் தேதி அதிகாலை என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் கரந்தன் வீட்டின் மேற்கூரையில் விளக்கு இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கரந்தன் வீட்டிற்கு 3.3.2020 ம் தேதிதான் மின்இணைப்பே பெற்றுள்ளார் என்றும் என்னிடம் காண்பிக்கப்படுவது அதுசம்மந்தமாக தகவல் அறியும்

உரிமைச்சட்டம் மூலமாக மின்வாரியத்தில் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் எமசாஆ.2. ஆனால் நான் சம்பவ இடத்தை பார்வையிட்டபோது கரந்தனின் வீட்டில் சோலார் லைட் போடப்பட்டிருந்தது. சோலார் லைட் இருந்தது உண்மையானால் அதுபற்றி வரைபடத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியிடமிருந்து சட்டை, கைலி, கத்தி கைப்பற்றியதற்கான அத்தாட்சி அதசாஆ.5ல் 2வது பக்கத்தில் 3வது அயிட்டத்தில் இரத்தக்கறைபடிந்த ப்ளு சிவப்பு கருப்பு கலர் கட்டம்போட்ட கைலி ஒன்று என எழுதப்பட்டதில் கைலி என எழுதப்பட்ட இடத்தில் ஏற்கனவே சட்டை என எழுதப்பட்டு அது அழிக்கப்பட்டு கைலி என எழுதப்பட்டுள்ளது என்றால் அது கைப்பிழையாக எழுதப்பட்டு உடனடியாக திருத்தம்செய்யப்பட்டு நான் அதில் கையொப்பம் செய்துள்ளேன். படிவம் 91லும் 3வது அயிட்டத்தில் மேற்படி திருத்தம் கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த திருத்தத்தில் என்னுடைய கையொப்பம் கண்டுள்ளது. இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை நான் தயார் செய்யவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் குற்றப்பத்திரிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது கிடையாது. 2வது எதிரி சின்னையாவை கைது செய்து விசாரிக்கும்போது இருந்த சாட்சிகளான சக்திவேல், சதீஷ்குமார் இருவரையும் நான்தான் விசாரித்துள்ளேன். அவர்களைது 161(3) வாக்குமூலங்களில் என்னுடைய கையெழுத்துதான் உள்ளது. 1வது எதிரியை வெள்ளைச்சாமி வீட்டின்முன்பு வைத்து கைது செய்தபோது வெள்ளைச்சாமி என்பவர் அவரது வீட்டில் இருந்தாரா என்றால் இல்லை. 1வது எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் வெள்ளைச்சாமியின் வீடு மெயின்ரோட்டிலிருந்து இருசக்கர வாகனம் மட்டுமே செல்லக்கூடிய ரோடு என்றால் சரிதான். மெயின்ரோட்டிலிருந்து வெள்ளைச்சாமியின் வீடு சுமார் 200 மீட்டர் தொலைவில் உள்ளது. அத்தாட்சி அதசாஆ.12ல் மாமரத்துப்பட்டி கரந்தனின் காட்டிற்கு கிழக்கே உள்ள உடப்பி என்பவரின் காட்டில் உள்ள சாலை அருகே

வைத்து அத்தாட்சி தயார் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது எதிரியிடமிருந்த சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து சம்பவத்தின்போது பயன்படுத்திய அவர் அணிந்திருந்த உடைகளை கைப்பற்றியதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் சம்பவம் நடந்து 2 நாட்களாக அதே உடைகளை எதிரி அணிந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வழக்கில் சம்மந்தப்பட்டதால் வீட்டிற்கு செல்லாமல் அதே உடையை அணிந்திருந்தார். என்னுடைய புலன் விசாரணையில் 1வது எதிரி அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எப்போது எங்கு வைத்து சிகிச்சை எடுத்துக்கொண்டார் என நான் துலக்கினேனா என்றால் எதிரியை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்மூலம் தெரிந்துகொண்டேன். 1வது எதிரியை மற்ற எதிரிகள் எங்கோ அழைத்துக்கொண்டுசென்று சிகிச்சை அளித்ததாகச்சொன்னார். 1வது எதிரியின் கைது குறிப்பாணையில் இடது தொடை, முதுகின் இடதுபக்கம், இடதுகைபுஜம், இடதுகை மணிக்கட்டு ஆகிய இடங்களில் காயம் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிரியை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பும்முன்பு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளிக்கவேண்டும் என கேட்டதற்கு சிறையில் எடுத்துக் கொள்வதாக கூறி நீதிமன்றக்காவலுக்குட்படுத்தப்பட்டார் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. நீதித்துறை நடுவர் அவர்களிடம் 1வது எதிரியை ஆஜர்படுத்தியபோது நீதிபதியிடம் இறந்துபோன சிவக்குமாரால் தனக்கு காயங்கள் ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. ரிமாண்ட் அறிக்கையில் சிவக்குமார் என்னை கத்தியால் குத்தியதால் இடது தொடையில் கத்திக்குத்து காயம் உள்ளது, சிகிச்சைக்கு அனுப்புங்கள் என கூறியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். இதுசம்மந்தமாக 1வது எதிரி 13.1.2019ம் தேதி மதியம் 12.20 மணிமுதல் 27.01.2019ம் தேதிவரை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான்.

இதுசம்மந்தமாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் 1வது எதிரி பெற்ற சிகிச்சை குறிப்பு என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அந்த சிகிச்சை குறிப்பு எமசாஆ.3. 1ம் எதிரி காயம்பட்டது குறித்து என்ன விசாரணை மேற்கொண்டேன் என்றால் எனது விசாரணையில் 1வது எதிரி இறந்த சிவக்குமாரை குத்த கத்தியை எடுத்தபோது சிவக்குமார் அதை பிடுங்கி அந்த இடத்தில் தள்ளுமுல்லு நடைபெற்றது என்றும் அதில் 1வது எதிரி உட்பட பின்பு நான் கைது செய்த எதிரிகள் சின்னையா, வெள்ளைச்சாமி ஆகியோர்களுக்கும் சிறு சிறு காயங்கள் இருப்பதை கண்டறிந்தேன். எனவே அந்த இடத்தில் கத்தியை ஒருவருக்கொருவர் மாறி மாறி பிடுங்கியபோது மேற்படி காயங்கள் ஏற்பட்டுள்ளது என தெரிந்துகொண்டேன். எதிரிகளுக்கு ஏற்பட்ட காயங்கள் சிவக்குமாருக்கு ஏற்பட்ட காயத்துடன் பார்க்கும்போது சிவக்குமாருக்கு ஏற்பட்ட காயம் அவரது நுரையீரல் வரை சென்று அதனால் சிறிது நேரத்திலேயே உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்ற விவரத்தையும் எனது விசாரணையில் தெரிந்துகொண்டேன். 1வது எதிரிக்கு ஏற்பட்ட காயம் குறித்துமுழுமையாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் உண்மைத்தன்மையை மறைத்து அவருக்கு ஏற்பட்ட காயம் பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நாகரத்தினக்கல்லை கைப்பற்றினேனா என்றால் எதிரிகளை கைது செய்யும்போது அதுபற்றி விசாரித்தேன். சம்பவத்திற்கு பின்பு எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து தெற்கு பக்கமாக செல்லும்போது மஞ்சள் நாகரத்தினக்கல்லை துணியில் சுற்றி மூங்கில் குடுவையில் வைத்திருந்ததை மீண்டும் தங்களது இருப்பிடம் சென்றுபார்த்தபோது காணவில்லை என்றும், வரும்வழியில் அனைவரும் வேகமாக விழுந்தடித்து ஓடியதில் அது கீழேவிழுந்து தவறியிருக்கலாம் என வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். அவ்வாறு தவறிவிட்ட நாகரத்தினக்கல்லை நான் தேடினேனா என்றால் இல்லை. 1வது எதிரியை

கைது செய்த உடப்பி காடு என்பது சம்பவ இடத்திலிருந்து 50 அடி தள்ளி மேற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி உடப்பி என்பவரை இவ்வழக்கில் சாட்சியகாக போடவில்லை என்றால் சரிதான். சந்தானகிருஷ்ணன், ஹரிஹரன் ஆகியோர்கள் எனது விசாரணையில் சிவக்குமாருக்கு காயங்கள் ஏற்படுவதற்கு முன்பே 1வது எதிரிக்கு காயங்கள் ஏற்பட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குச்சம்பவத்திற்கு முதல்நாள் சந்தான கிருஷ்ணன், ஹரிஹரன், இறந்துபோன சிவக்குமார் ஆகிய மூவரும் சென்று 1வது எதிரியிடம் ரூ.1,50,000/- கொடுத்ததாக சொல்லியுள்ளார்கள் 9.1.2019ம் தேதி மாலையில் கொடுத்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. 10.01.2019ம் தேதி கொடுத்ததாக சொல்லியுள்ளார். புகாரிலும், நான் விசாரரித்தபோதும் சந்தானகிருஷ்ணன், ஹரிஹரன் ஆகியோர்கள் எந்த எந்த தேதி பணம் கொடுத்தோம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் பணம் கொடுத்ததாக கூறியுள்ளார். தேதிகளை குறிப்பிட்டுக்கூறவில்லை. பணம் கொடுத்தபோது உடனிருந்த சாட்சிகள் யாரையும் புகார்தாரர் சொல்லவில்லை என்றால் அவர் சாட்சிகள் பற்றி கூறவில்லை. அதனால் நான் விசாரிக்கவில்லை. சாட்சி ஹரிஹரனிடமிருந்து சட்டை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் சான்றுப்பொருட்கள், சான்றாவணங்கள் மற்றும் சாட்சியின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கவில்லை என்றும் பின்னிட்டுத்தான் நீதிமன்றத்திற்கு அனுபபியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார் 10.1.2019ம் தேதியன்று இரவு 11 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றும் எங்களது வசதிக்காக அதிகாலை 2 மணிக்கு கொடுக்கப்பட்ட காட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன எதிரிகளை சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், எழுதாத வெள்ளைப்பேப்பரில் அவர்களிடம் கையொப்பம்

பெற்றுக்கொண்டு பின்னிட்டு ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து 1வது எதிரி அன்றைய தினமே எங்கள் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்திருந்தார் என்றும் அவரது புகார் மறைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சந்தானகிருஷ்ணன், ஹரிஹரன் ஆகியோர்கள்தான் உண்மையான எதிரிகள் என்றும், அதை மறைத்து எதிரிகளுக்கு எதிராக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆவணம் பெற்றேனா என்றால் இல்லை. சம்பவம் சம்மந்தமாக கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.1,50,000 த்தை என் புலன்விசாரணையில் கைப்பற்றினேனா என்றால் வழக்கின் எதிரி சின்னையாவை (2 வது எதிரி) கைது செய்தபோது அவருக்கு கிடைத்த பங்குத்தொகையை அவர் செலவு செய்துவிட்டதாக வாக்குமூலத்தில் கூறியுள்ளார். 1வது எதிரி கருஞ்சாமியை கைது செய்தபோது தனக்கு காயம் ஏற்பட்டதால் அந்தபணத்தை மற்ற எதிரிகள் பிரித்துக்கொண்டதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளார். மற்ற கைது செய்யப்பட்ட எதிரிகளும் அவர்களுக்கு பாகத்தில் கிடைத்த பணத்தை செலவு செய்துவிட்டதாக கூறினார்கள். சாபொ1 கத்தியால் இறந்துபோன சிவக்குமாருக்கு எந்தவிதமான காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்து நான் முழுமையான, சரியான விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.06.30 16:24:40 +0530

Principal District Judge,
Dindigul.